13.02.2026 O.S. 276/2016 பி.வா.சா 2 மோகன் தங்கபாண்டியன்

சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு வாதிகள் தரப்பில் குறுக்குவிசாரணை

முதல் விசாரணை வாக்குமூலத்திற்கு விபரம் சொன்னது யார் என்றால் வழக்கறிஞர் கேட்டாரர். நான் விபரங்களை கொடுத்தேன். அதன் அடிப்படையில் தயார் செய்யப்பட்டது. இந்த வழக்கின் சங்க தரப்பினர்கள் என்னை சாட்சியம் அளிக்க சொன்னார்கள். முதல்விசாரணை வாக்குமூலத்தில் எனக்கு வழக்கு விபரம் தெரியும் என சொல்லவில்லை என்றால் சரிதான். வழக்கு விபரம் எனக்கு நேரில் தெரியாது என்றால் சரிதான். வழக்கு நடப்பது தெரியும். புல எண். 339/2ல் எனக்கு இடம் இருப்பதாக கூறப்பட்ட நிலையில் அது சம்பந்தப்பட்ட ஆவணங்கள் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். நான் தான் ஆறுமுக பாண்டியன் மகன் மோகன் தங்கபாண்டியன் என்பதற்கு ஆவணம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்யவில்லை. ஆதார் கார்டு கொடுத்துள்ளேன். ஆறுமுக பாண்டியன் மகன் மோகன் தங்கபாண்டியன் என்பவர் நான் இல்லை என்றால் சரியல்ல. வாதிகளுக்கு எதிராக நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எனக்கு சொந்த ஊர் நவநீதகிருஷ்ணாபுரம் ஆகும். எனக்கு இந்த வழக்கு சொத்து, முன் உரிமை பற்றி தெரியாது என்றும், பிரதிவாதிகள் சொல்வதை வைத்து நான் உண்மைக்கு மாறாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

(ஒம்)எஸ்.முருகவேல்,
கூடுதல் சார்பு நீதிபதி,
தென்காசி.